TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074730

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2023** FIR No.: மு.த.அ. எண் **06/2023** Date: நாள் **12.05.2023**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **11.05.2023** Date to : நாள் வரை **12.05.2023**
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **12.05.2023** Time : நேரம் **17.00 Hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **19.00 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **2.5 Kms South**
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **AWPS, Tiruvannamalai.**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.R.Vetrivel** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Radhakrishnan**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-45** (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **Artist** (g) Address : முகவரி **Bajanai Koil Street, Melpalanandal Village, Tiruvannamalai Taluk & District.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **AO: Tmt.Parameshwari, Special Sub-Inspector of Police, AWPS,Tiruvannamalai.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் -----

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) ----

-----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது</u>. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் 12.05.2023 ஆம் தேதி 17.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரார் திரு.R.வெற்றிவேல், த/பெ.ராதாகிருஷ்ணன் மேல்பாலானந்தல் கிராமம், திருவண்ணாமலை தாலுக்கா & மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: விடுநர் R.வெற்றிவேல், வயது.45, த/பெ ராதாகிருஷ்ணன், 55/2, பஜனை கோயில் தெரு, மேல்பாலானந்தல் கிராமம், திருவண்ணாமலை தாலுக்கா & மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. ஐயா, நான் திருவண்ணாமலை தாலுக்கா மேல்பாலானந்தல் கிராமம் பஜனை கோயில் தெருவில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். என் மனைவி பெயர் பரிமளா. எங்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். மூத்த மகன் சூர்யா 11 -ம் வகுப்பும் இளைய மகன் லோகித் 6 -ம் வகுப்பும் மங்கலத்தில் உள்ள அரசு மேல்நிலை பள்ளியில் படித்து வருகின்றார்கள். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சினிமா கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், ஓவியம் வரைதல் போன்ற வேலைகளை செய்து வருகிறேன். மேலும் நேயர் குரல் என்ற பத்திரிக்கையில் ரிப்போட்டராகவும் இருந்து வருகிறேன். நான்

- இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Vetri 12.05.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12.05.2023
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.05.2023 - 2000 hrs

Name: பெயர் S. VELMURUGAN
Rank: நிலை DSP No. எண் V&AC

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

மங்கலத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியின் பள்ளி மேலாண்மை குழு பெற்றோர் பிரதிநிதியாகவும் இருந்து வருகிறேன். தமிழ்நாடு முழுவதும் கலைநிகழ்ச்சிகள் நடத்தி அதன் மூலம் வரும் வருவாயில் ஜீவனம் செய்து வருகிறேன் மேலும் எனது தகப்பனார் ராதாகிருஷ்ணன் வயது.84, தாயார் லட்சுமி ஆகிய இருவரும் கடந்த 45 ஆண்டுகளாக எங்களது ஊரில் டீக்கடை நடத்தி வருகிறார்கள். அவர்கள் என் வீட்டின் அருகே தனியாக வசித்து வருகிறார்கள். எனக்கு உடன் பிறந்த வேல்விழி மற்றும் தேவகி என்ற இரண்டு சகோதரிகள் உள்ளனர். இருவரும் எனக்கு மூத்தவர்கள். அவர்களுக்கு திருமணம் ஆகி விட்டது. கடந்த 2022-ம் வருடம் டிசம்பர் மாதம் என்னுடைய மூத்த அக்கா வேல்விழி தன் மகள் திருமணத்திற்கு பத்திரிக்கை வைத்து என்னை அழைக்க என் வீட்டிற்கு வந்து என்னை அழைத்ததின் பேரில் நான் திருமணத்திற்கு சென்று வந்தேன். இதனால் கோபமடைந்த என் மனைவி பரிமளா என்னுடன் சண்டையிட்டு கொண்டு பூந்தமல்லியில் வசிக்கும் அவளுடைய அண்ணன் வீட்டிற்கு சென்று விட்டாள். நான் என்னுடைய இரண்டு மகன்களுடன் தனியாக எனது கிராமத்தில் வசித்து வந்தேன். பின்னர் என் மனைவி பரிமளா என் மீது திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில புகார் மனு கொடுத்தது சம்மந்தமாக என்னை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்து கடந்த 09.05.2023 அன்று சுமார் 1215 மணிக்கு என்னுடைய தொலைபேசி எண். 9092599520-ற்கு திருவண்ணாமலை மகளிர் காவல் நிலையத்தில் இருந்து பேசுவதாக தொலைபேசி எண். 9498100442 –லிருந்து பெண் காவல் அதிகாரி ஒருவர் என்னை தொடர்பு கொண்டு உங்கள் மீது உங்கள் மனைவி பரிமளா அவர்கள் புகார் மனு அளித்துள்ளார்கள் நீங்கள் விசாரணைக்கு வர வேண்டும் என்று சொன்னார்கள். நான் தொழில் சம்மந்தமான முக்கிய வேலையில் இருக்கிறேன் வரும் 11.05.2023 வியாழக்கிழமை காவல் நிலையம் வருவதாக சொல்லி நானும் அவ்வாறே இரண்டு மகன்களுடன் அனைத்து மகளிர் காவல் நிலையம் திருவண்ணாமலை சென்றேன். அப்போது சுமார் காலை 1130 மணி இருக்கும். காவல் நிலையத்தில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் பரமேஷ்வரி என்பவர் என்னை விசாரித்து எழுத்து மூலமாக என்னுடைய அறிக்கையை பெற்றுக்கொண்டு பின்னர் உன் மனைவி கொடுத்த புகாரை வைத்து உன்னை சிறைக்கு தள்ளி விட முடியும் என்று என்னை மிரட்டி இத்துடன் உன் உடன்பிறந்த சகோதரிகள் உன் வீட்டிற்கு வரக்கூடாது என்று சொல்லி முடித்தும் உன் மீது வழக்கு போடாமல் இருக்க காவல் நிலைய செலவிற்காக லஞ்சப்பணமாக எனக்கு ரூ.3,000/- தர வேண்டும் என்று கராராக சொல்லி நாளை லஞ்சப்பணம் எடுத்து வா என்று மிரட்டி அனுப்பி விட்டார். நானும் மறுநாள் 12.05.2023 காலை வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் மறுநாள் திருமதி. பரமேஷ்வரி அவர்களுக்கு அவருடைய தொலைபேசி எண். 9677730744 க்கு என்னுடைய தொலைபேசி எண்.9092599520 லிருந்து மதியம் சுமார் 0115 மணிக்கு போன் செய்து பேசிய போது நான் அவரிடம் நேற்று நடந்த விசாரணையில் என்னை மட்டும் விசாரணை செய்தீர்கள் என் மனைவியை ஒரு வார்த்தை கூட அறிவுறுத்தி பேசவில்லை என்று நான் கேட்டதற்கு அவர், முதலில் நான் கேட்ட ரூ.3,000/- லஞ்சப்பணத்தை எடுத்துவா என்று சொன்னார். நான் அதற்கு இன்னும் என்னால் ஆயத்தம் செய்ய முடியவில்லை என்று நான் சொன்னேன். அதற்கு அவர் இன்று நான் காவல் நிலையம் வர மாட்டேன் நாளை 13.05.2023 காவல் நிலையத்திற்கு பணத்துடன் வந்து என்னிடம் கொடுக்கவும் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத காரணத்தால் என்னிடம் லஞ்சப்பணம் வேண்டும் என்ற குறிக்கோளுடன் என்னை கட்டாயப்படுத்தி லஞ்சம் கேட்கும் திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு உதவி

ஆய்வாளர் திருமதி. பரமேஷ்வரி என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டி எனக்கு தெரிந்த நபர் மூலம் மனு தயார் செய்து தங்களிடம் அளிக்கிறேன். இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு,(Sd XXXXX) R.வெற்றிவேல், 12.05.2023

Sir,

Received the complaint on 12.05.2023 at 17.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also quickly verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 12.05.2023 at 19.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.06/2023, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-XXXXX) 12/05/2023. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai.

12.05.2023

S. VELMURUGAN
(Deputy Superintendent of police, V & AC Tiruvannamalai)